உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

அட்டர்ணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

நீர்கொழும்பு, தலாதுவ, சென்ற் ஜூட் பிளேஸ், இலக்கம் 71/13 இல் வசிக்கும் மெதகம கமகே திலக்குமார ஆகிய என்னால், நிக்கலக்ஸ் மார்க்கஸ் மாவத்தை, இல. 91 இல் வதியும் வர்ணகுலசூரிய ஜூட் லன்டரி பெனாண்டோ என்பவருக்கு வழங்கப்பட்ட நீர்கொழும்பு பிரசித்த நொத்தாரிசு எஸ். ஏ. டீ. ஏ. அமரசேக்கர அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 18851 ஆம் இலக்கம் கொண்ட அட்டர்ணித் தத்துவத்தின் பிரகாரம், சொல்லப்பட்ட எனது அட்டர்ணித் தத்துவதாரரால் செய்யப்படும் எந்தவொரு கொடுக்கல் வாங்கல்கள் செயல்களுக்கும் நான் பொறுப்பாளியல்லவென இத்தால் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் பொது மக்களுக்கும் அறியத் தருகின்றேன்.

மெதகம கமகே திலக்குமார.

3-27

அட்டர்ணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

கண்டி மாவட்டம், பேராதெனிய, ஹிந்தகல, கலஹா வீதி, 101/1 ஆம் இலக்க இடத்தில் வதியும் கருந்துகொட கங்காணம்லாகே நாலினி பண்டார ஆகிய நான் அவசிய தேவை காரணமாக வெளிநாடு செல்ல ஏற்பட்டமையால் எனது எல்லா காரியங்களையும் செயல்படுத்து வதற்காக கேகாலை பகிரங்க நொத்தாரிசு சி. மாலினி ஜயவர்தன என்பவரால் 2002.07.15 ஆந் திகதி உறுதிப்படுத்தப்பட்ட 1312 ஆம் இலக்கம் கொண்ட அட்டோர்ணி தத்துவம் மூலம் எனது அட்டோர்ணியான பேராதனை, ஹிந்தகல, கலா வீதி, 101/1 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த கருந்துகொட கங்கானம்லாகே தொன் ஜயவீர ரத்நாயக்க என்பவரை நியமனம் செய்தேன். இப்போது நான் மீண்டும் இலங்கைக்கு திரும்பிவிட்டமையால் மேற்கூறப்பட்ட அட்டோர்ணி தத்துவத்தை 2004.01.13 ஆந் திகதி தொடக்கம் இரத்துச்செய்து செல்லுபடியற்றதாக்கியுள்ளேன் என இலங்கைக் குடியரசுக்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறிவிக்கிறேன்.

கே. கே. நாலினி பண்டார.

3-85

அட்டோர்ணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

கண்டி, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, இல. 42 ஐச் சேர்ந்த மற்றும் தற்பொழுது இல. 7 டார்லிங்டன் ட்ரைவ் செரிபுரூக், என். எஸ். டபிள்யு. 2126, அவுஸ்திரேலியா என்ற முகவரியில் வசிக்கும் நிஸ்ஸங்க ஏக்கநாயக்க ஆகிய நான், அவுஸ்திரேலியா என். எஸ். டபிள்யு. 2125, வெஸ்ட் பெனன்ட் ஹில்ஸ், பெனன்ட் ஹில்ஸ் வீதி, இல. 18/562 ஐச் சேர்ந்த சொலிசிட்டர் மாயா நாணயக்காரவினால் 2003, ஒற்றோபர் 02 ஆந் திகதியிடப்பட்டு அத்தாட்சிப்படுத்தப்பட்டு கொழும்பு 5, திம்பிரிகஸ்யாய வீதி, இல. 446 இல் வசிக்கும் மொஹமட் ரீஸா ஆப்தீன் என்பவருக்கு வழங்கப்பட்டிருந்த விசேட அட்டர்ணித் தத்துவத்தை இரத்துச் செய்கின்றேன் என இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்துக்கும் பொதுமக்களுக்கும் அறிவித்துக்கொள்வதுடன், மேற்கூறப்பட்ட இல. 446, திம்பிரிகஸ்யாய வீதி, கொழும்பு 5 என்ற முகவரியைச் சேர்ந்த மொஹமட் ரீஸா ஆப்தீனினால் எனது சார்பாக மேற்கொள்ளப்படும் எந்த நடவடிக்கைக்கும் நான் பொறுப்புதார் அல்ல எனவும் தெரிவித்துக்கொள்கிறேன்.

நிஸ்ஸங்க ஏக்கநாயக்க.

3- 176

அட்டோர்னி தத்துவத்தை இரத்துச் செய்தல்

இல. 5, பான்ஸ் அவனியூ. மவுண்ட் லவின்யா என்ற முகவரியைச் சேர்ந்தவரும், தற்பொழுது மேட்ஜ் ஸ்ரீட் 24, 4900 ஹேர்போர்ட் ஜேர்மனி என்ற முகவரியில் வசிப்பவருமான ஹான்ஸ் நெ தர்மான் ஆகிய நான் டித்தாட் வோக்கர் கிளான் என்பவருக்கு அளிக்கப்பட்டதும், கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு வீரக்கோன் எட்வர்ட் செல்வராஜா என்பவரால் அத்தாட்சிப் படுத்தப்பட்டதும் 06.09.1993 ஆந் திகதி கொண்டதுமான 333 ஆம் இலக்க, அற்றோனித் தத்துவப்பத்திரம் இன்று முதல் இத்தால் இல்லாதொழிக்கவும் இரத்துச் செய்யவும் அழிக்கவும்படுகின்றது என இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கத்திற்கும் பொதுமக்களுக்கும் இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது. இத்திகதியிலிருந்து எனது சார்பில் மேற்படி டித்தாட் வோக்கர் கிளான் என்பவரால் செய்யப்படும் எவையேனும் கொடுக்கல் வாங்கல்களுக்கு நான் பொறுப்பாளியாக மாட்டேன்.

ஹான்ஸ் நெ தர்மான்.

3- 106